## வெளியீட்டு அடிப்படையிலமைந்த உதவி (ஜீபிஓபீஏ) மீதான உலகலாவிய பங்குடமை செயற்திட்டம் - 2014

வெளியீட்டு அடிப்படையிலமைந்த உதவி (ஜீபிஓபீஏ) மீதான உலகலாவிய பங்குடமை செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் புனர்நிர்மானத்திற்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி மற்றும் சர்வதேச அபிவிருத்திச் சங்கம் என்பவற்றிற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2011 திசெம்பர் 27 ஆந் திகதிய ரீஎவ்099870 ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் II (பீ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் செயற்திட்டக் காலம்

வெளியீட்டு அடிப்படையிலமைந்த உதவி (ஜீபீஓபீஏ) மீதான உலகலாவிய பங்குடமை செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கையின் படி, தற்போது நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவுள்ள முன்னைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அமுலாக்கல் முகவராக உள்ளது. தற்போதுள்ள மற்றும் புதிய கழிவுநீர் வலைப்பின்னலுக்கான கழிவுநீர் இல்லங்களின் தொடர்புறுத்தல் எண்ணிக்கையினை அதிகரிப்பதன் மூலம் கொழும்பு பெரும்பாகத்திலுள்ள குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் சுகாதார சேவைகளை மேம்படுத்தல் மற்றும் குடும்ப மட்டத்தில் களச் சுகாதார சேவைகளை முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். மானிய உடன்படிக்கையின்படி செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 1,132.17 மில்லியனுக்குச் சமனான யூஎஸ்டொலர் 9.85 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 583.66 மில்லியன் அல்லது 52 சதவீதத்துக்குச் சமனான் யூஎஸ்டொலர் 5.08 மில்லியனை நிதியளிப்பதற்கு புனர் நிர்மாணத்திற்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கியும் சர்வதேச அபிவிருத்திச் சங்கமும் இணங்கியிருந்தன. அத்துடன், ரூபா 372.4 மில்லியன் அல்லது 33 சதவீதத்துக்குச் சமனான யூஎஸ்டொலர் 3.24 மில்லியனை இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் ரூபா 126.97 மில்லியன் அல்லது 11 சதவீதத்துக்குச் சமனான யூஎஸ்டொலர் 1.10 மில்லியனை நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் பங்களிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. எஞ்சிய ரூபா 49.13 மில்லியன் அல்லது 4 சதவீதத்துக்குச் சமனான் யூஎஸ்டொலர் 0.43 மில்லியன் நலனாளிகளால் பங்களிப்பச் செய்யப்பட்டது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2011 திசெம்பரில் இல் தொடங்கியிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்விளை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட மேம்படுத்திய நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் மானியம் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீளளித்தல்களிற்கு ஆதாரமானவையாக மானிய உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் காணப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த ஊழியர் கோப்பிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 08 ஆம் பிரிவின் படி, ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை ஏற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்கள் பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவுசெய்தல் வேண்டும். மேலும், கேள்வி கையளிக்கப்பட்ட பின்னர் 60 நாட்களிற்குள் பொது ஒப்பந்த பதிவாளரிடம் உடன்படிக்கைகள் பதிவுசெய்யப்படுதலும் வேண்டும். செயற்திட்டச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரர்களால் இத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2014 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட தொகை | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டின் போது | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | யூஎஸ்டொலர் மில். | ரூபா மில். | ரூபா மில். | யூஎஸ்டொலர் மில். | ரூபா மில். | யூஎஸ்டொலர் மில். | ரூபா மில். |
| மானியம் | 5.081 | 583.662 | 200.000 | 0.024 | 3.119 | 0.024 | 3.119 |
| ஜீஓஎஸ்எல் | 3.242 | 372.402 | 165.000 | 1.240 | 161.881 | 1.608 | 209.941 |
| நீர்வழ. வடிகா. சபை | 1.105 | 126.977 | 50.000 | 0.383 | 50.000 | 0.498 | 65.000 |
| நலனாளிகள் | 0.428 | 49.135 | - | 0.014 | 1.875 | 0.054 | 7.025 |
| மொத்தம் | 9.856 | 1,132.176 | 415.000 | 1.661 | 216.875 | 2.184 | 285.132 |

வெளிநாட்டு மானியங்களின் கீழ் 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 200 மில்லியன் தொகையான மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 35 மில்லியன் தொகை நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சால் அமுலாக்கப்பட்ட ஏனைய செயற்திட்டங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் பிரதான கொள்வனவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 11 கூறுகளில் ஐந்து கூறுகள் நிதி வரையறைகள் காரணமாக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தின் பிரதான கொள்வனவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த 15,407 நலனாளிகள் குடும்பங்களிற்கான நீர் வழங்கல் இணைப்பு இலக்கு ஆரம்ப கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தவறான மதிப்பீடுகள் காரணமாக அதன்பின்னர் 8,800 நலனாளிகள் குடும்பங்களாக குறைக்கப்பட்டது.

(இ) தெஹிவல, கல்கிஸ்ஸ, கொலன்னாவ, ஜாஎல/ஏகல மற்றும் மொறட்டுவ/ரத்மலானை ஆகிய பிரதேசங்களில் நேரடி கழிவுநீர் தொடர்புறுத்தல்களுடன் தொடர்புடைய ஒப்பந்தங்கள் 2015 சனவரி 17 ஆந் திகதியளவில் பூரணப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அதன் மீது மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் பௌதீக செயன்முன்னேற்றம் ரத்மலானை மற்றும் மொறட்டுவ கழிவு நீர் அகற்றல் செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் தாமதம் காரணமாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 71 சதவீதமாக காணப்பட்டது.

(ஈ) மானிய உடன்படிக்கை மற்றும் செயற்திட்ட அமுலாக்கல் கையேடு என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், செயற்திட்டத்திற்கான செயற்திட்டப் பணிப்பாளர் முழுநேர அடிப்படையில் நியமிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், 2011 நவம்பர் முதல் பதிற்கடமை அடிப்படையில் செயற்திட்ட முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

### 3.3 நிதிக் கட்டுப்பாடு தொடர்பான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளகக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பௌதீக உள்ள தன்மையினை மெய்மையாய்வு செய்வதற்காக அச்சொத்துக்கள் மீதான பௌதீக மெய்மையாய்வு மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

வழமையாக, செயற்திட்டப் பதவியணியினருக்கான வேதனங்களின் கணிப்பீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் செய்யப்பட்டு வருவதுடன் நிர்வாகத் தேவைகளிற்காக போதியளவு பதவியணியினரை செயற்திட்டம் ஆட்சேர்ப்புச் செய்திருந்த போதிலும், மேந்தலைகளில் 20 சதவீதம் செயற்திட்டத்திலிருந்து சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக செயற்திட்டத்தினால் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குச் செலுத்தப்பட்ட மேந்தலைச் செலவுகளின் தொகை ரூபா 28 மில்லியனாகும்.